# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 21.5.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான கோடைகால இலவச விளையாட்டு பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இந்த இலவச பயிற்சி முகாமானது அழகப்பா பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து 4-வது ஆண்டாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சி முகாமில் ஹாக்கி, கைப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, கபடி, யோகா, கோ-கோ, கிரிக்கெட், சதுரங்கம் மற்றும் டென்னிஸ் போன்ற விளையாட்டுகளுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வருகிற 24.5.2019 முதல் 2.6.2019 வரை 10 நாட்கள் இப்பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சி முகாம்கள் பல்கலைக்கழக விளையாட்டு மைதானங்களில் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், பிற்பகல் 3.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையிலும் நடைபெறும். பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவியருக்கு ஊட்டச்சத்து உணவாக பால், முட்டை மற்றும் பயறு வகைகள் வழங்கப்படும். பயிற்சி முகாமில் அனைத்து நாட்களிலும் தவறாது கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் அழகப்பா பல்கலைக்கழக விளையாட்டு இயக்குனரகம், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி மற்றும் அழகப்பா யோகா மையம் ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது பல்கலைக்கழக இணையதளம் றறற.யடயபயீயரளைநசளவைல.யஉ.டை வாயிலாகவோ பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு பல்கலைக்கழக விளையாட்டு இயக்குனரை 04565-223570, 223571 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பல்கலைக்கழக விளையாட்டு இயக்குனரகத்தில் 23.05.2019 அன்று மாலை 4.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். இத்தகவலை பல்கலைக்கழக பதிவாளர் பேரா. ஹா.குருமல்லேஷ் பிரபு தெரிவிக்கிறார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்